# ஜாமக்காரன்
# JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15


**VOLUME - 4 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 2**

**FEBRUARY 2020 TAMIL & MALAYALAM**

**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**



Mob.: No. **9894261333** இந்த எண். **SMS** உபயோகத்துக்காக மட்டும்

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com


ஜாமக்காரன்

J A M A K K A R A N



கர்த்தருக்குள் கிருபையாக எனக்கு கிடைக்கப்பெற்ற அன்பு வாசகர்களுக்கு

உங்களுக்கு கிருபையும், சமாதானமும் பெருகுவதாக. புதிய வருடம் தொடங்கி ஒரு மாதம் முடிந்துவிட்டது. புதிய வருட ஆவிக்குரிய திர்மானங்களை ஒரு பேப்பரில் எழுதி வைத்து ஒவ்வொரு நாளும் நீங்கள் தனியாக ஜெபிக்கும்போது எழுதிவைத்த தீர்மானங்களில் எத்தனை தீர்மானங்களை இதுவரை நிறைவேற்றியுள்ளீர்கள் என்பதை சோதித்து பாருங்கள். **நிறைவேற்ற மறந்த** தீர்மானங்களுக்காக கர்த்தரிடம் **மன்னிப்பு** கேட்டு எப்படியாவது நேரத்தை ஒதுக்கி தீர்மானங்களை ஒன்றன்பின் ஒன்றாய் நிறைவேற்றுங்கள். தினசரி இந்த தற்பரிசோதனை முறையை தொடர்ந்தால் நிலையான ஆவிக்குரியவர்களாக எல்லாரும் வாழ்வீர்கள்.

அப்படியானால் தினசரி **மனம் திரும்ப வேண்டுமா?** என்று சிலர் கேட்கலாம். ஆம். என்பதுதான் அதற்கான பதில் ஆகும். ஒரு முறை **மார்ட்டின்லூத்தர்** அவர்களிடம் **இரட்சிப்பு** ஒரு முறைதான் **மனம் திரும்புதலும்** ஒரு முறை போதுமே என்றார்.

அதற்கு மார்ட்டின் லூத்தர் கூறினார், **இரட்சிப்பு** மனிதனுக்கு **ஒரு முறைதான்.** ஆனால் **மனம் திரும்புவது** என்பது **ஒரு நாளில் பல முறை ஏற்படும் அனுபவமாகும்.** காரணம் ஒவ்வொரு நாளும் நாம் பல விதத்தில் தவறு செய்கிறோம். பலமுறை கர்த்தருடைய மனதை வேதனை படுத்திவிடுகிறோம்.

# FEBRUARY - 2020

வார்த்தையாலும்செயலாலும் , பார்வையாலும், சிந்தனையாலும் தவறுகள் செய்து விடுகிறோம். ஒரு வேளை பாவம் செய்யாவிட்டாலும் மேலே குறிப்பிட்ட விஷயங்களில் தவறுகள் உண்டாகிவிடுகிறது. அது ஆண்டவரின் மனதை நோகடித்து விடுகிறது. ஆகவே உடனுக்குடனே உணர்த்தப்பட்ட உடனே கர்த்தரிடம் மன்னிப்ப கேட்டு சரிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

இதுதான் ஒரு விசுவாசியின் நிலையான ஆவிக்குரிய ஜீவியத்துக்கு ஏற்ற நல்ல ஆலோசனையாகும். அதனால்தான் தாவீது **கர்த்தாவே நிலையான ஆவியை** எனக்கு தாரும் என்று கெஞ்சுகிறான்.

2019 டிசம்பர் மாத ஜாமக்காரனில் பக்கம் 85ல் நான் எழுதும் ஜாமக்காரன் பத்திரிகையால் எத்தனை **ஊழியர்களின்**, சபைகளின், **சபை தலைவர்களின்**, பிஷப்மார்களின் வெறுப்புக்கு நான் ஆளாகியிருக்கிறேன் என்பதை கொஞ்ஜமாக **பட்டியலிட்டு** எழுதியதை வாசித்த பலர் மனது மிகவும் வேதனையடைந்ததாக வாசகர்கள் எழுதியதையும், தொலைபேசியில் பேசியதை கேட்டபோது என் தெய்வத்தை துதித்தேன். **என்னை நேசிக்கும்** ஆயிரக்கணக்கான **உள்ளங்களை** கர்த்தர் **என் ஊழியத்துக்கென்று** ஆயத்தப்படுத்திக்கொடுத்ததை நினைத்தபோது மற்றவர் என் மேல் கொள்ளும் வெறுப்பு, வாசகர்கள் என்மேல் காண்பிக்கும் அன்பில் எரிந்து கருகிபோனது. என் உள்ளம் இலகுவானது.

கர்த்தர் தாமே ஒவ்வொரு வாசகர்களையும் நிறைவாய் ஆசீர்வதித்து கர்த்தர் வருமளவும் அவர்கள் விழாதபடி காத்து நிலையான ஆவியை தந்தருளுவாராக. ஆமென்.

தொடர்ந்து ஜெபிக்கிறேன். **டாக்டர் புஷ்பராஜ்**


**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | |
|---|---|
| 1. Title of the news paper | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication : | 89,Majeeth Street, Old Suramangalam, Salem - 636 005. |
| 4. Periodicity of its publication : | Monthly |
| 5. Printer's name | : M.Velu |
| (whether citizen of India) | : Indian |
| Address : | P.M.Press 168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : Indian |
| address | 89,Majeeth Street, Old Suramangalam. Salem - 636 005 |

I, **Dr.M.G.E.PUSHPARAJ** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*Sd.* **Dr. M.G.E. PUSHPARAJ**
Signature of Publisher & Editor

Dated: 10-2-2020
Salem - 5

# அந்தி கிறிஸ்துவின் ஊழியர்கள்

2019 பிப்ரவரி ஜாமக்காரனில் அந்தி கிறிஸ்துவின் ஆட்கள் CSI சபைக்குள் நுழைந்துவிட்டார்கள் என்ற தலைப்பில் CSI மாடரேட்டரும் மத்திய கேரளா டையோசிஸ் பிஷப் அவர்களுக்கான **Most Rev. தாமஸ் K. உம்மன்** அவர்கள் **லெந்துகால உபவாச** ஜெபக்குறிப்புகள் என்ற பெயரில் அனைத்து CSI **24 டையோசிஸ்களுக்கும்** ஒரு அறிக்கையை அச்சடித்து சென்னை CSI சினாட் மூலமாக அனுப்பியுள்ள விவரமும் அதில் அடங்கிய அந்தி **கிறிஸ்துவின்** நவீன உபதேசங்களை CSI கைக்கொள்ள வேண்டும் என்ற மாடரேட்டரின் பிழையான ஆலோசனைகளை குறித்து எழுதினேன்.

**அந்தி கிறிஸ்து** தன்னை உலகத்தில் வெளிப்படுத்தும்முன் **தன் ஆட்களை,** கிறிஸ்துவ சபைகளை **வேத வசனத்திலிருந்து** விலக்கி சபை மக்களை கிறிஸ்துவிடமிருந்து பிரிக்கும் பயங்கர திட்டத்தை நிறைவேற்ற சபைகளின் உயர்ந்த தலைமையில் உள்ளவர்களை தன் வசமாக்கும் திட்டத்தில் எபிஸ்கோப்பல் சபைகளில் முதலில் மார்த்தோமா சபை தலைவர்களையும் இபபொழுது CSI **சபைகளின்** பிரதான தலைவராகிய **மாடரேட்டர்** அவர்களையும் தன் திட்டத்தை நிறைவேற்ற WCC மூலமாக தன்வசமாக்கிவிட்டான்.

நல்ல கிறிஸ்தவ வளர்ப்பில் வளர்க்கப்பட்டு நல்ல ஆயராகவும் பணியாற்றிய மாடரேட்டர் **Most Rev. தாமஸ் K. உம்மன்** அவர்களை அந்தி கிறிஸ்துவின் ஆட்கள் தனக்கு கீழ்படியும் ஆளாக தன் வசமாக்கிக்கொண்டார்கள் என்ற விவரத்தையும், அதனால் உண்டாகும் ஆபத்தையும், அதன் முழு விவரத்தையும் ஜாமக்காரனில் எழுதி அறிவித்தேன்.

பிஷப் அவர்களை டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் அவமானப்படுத்திவிட்டார் என்று தவறாக நினைத்தார்கள். ஆனால் வசனத்தை அறிந்த ஆயர்கள் சபை விசுவாசிகள் **அந்தி கிறிஸ்துவின்** வருகைக்குமுன் நடப்பவைகளை குறித்து வேத வசனம் மூலமாக அறிந்தவர்கள் அனைவரும் ! **நான் எழுதிய எச்சரிப்பை** ஏற்றுக்கொண்டு அவர்கள் எனக்கு எழுதியவதாவது.

எங்கள் பிஷப் திருமேனி அவர்கள் ஒவ்வொரு CSI ஆலயத்திலும் ஒவ்வொரு மாதமும் கன்வென்ஷன்போல ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தப்படவேண்டும் என்று கூறியவராயிற்றே! அப்படி சபைகள் ஆன்மீகத்தில் வளர வேண்டும் என்று விரும்புகிற பிஷப் அவர்கள் எப்படி **WCCயின் நிர்பந்தத்துக்கு** அடிமையானார். **அந்த உபதேசத்தினால்** சபை வாலிப பிள்ளைகள் **கெட்டுப்போவார்கள்** என்பதை அவர் உணரவில்லையா? சங்கீதக்காரன் **நட்சத்திரங்களையும்** ஆகாய விரிவுகளையும் கண்டு அதில் **தேவனுடைய மகிமையை** காணுகிறேன் என்றுதானே கூறுகிறான். இயற்கையில் **கடவுளை கண்டதாக** கூறவில்லையே ! பிஷப் அவர்களுக்கு அந்த விஷயம் எப்படி தெரியாமல் போயிற்று.

டாக்டர் அவர்கள் ஜாமக்காரனில் அந்த கள்ள உபதேசங்களை எழுதி அறிவிக்காது போயிருந்தால் பிஷப் எழுதிய அந்த அறிக்கையை பற்றி நாங்கள் அறிந்திருக்க முடியாது. டாக்டர் தயவாக எங்கள் சபைக்கு ஒரு நாள் உபவாச கூட்டத்துக்காவது வர வேண்டும். அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் ? இப்படி பலர் கடிதம் எழுதியுள்ளார்கள்.

கீழே நீங்கள் வாசிப்பது வயது முதிர்ந்த ரிடயர்டு ஆன உயர் அதிகாரி அவர்கள் எழுதிய கடிதம் ஆகும். 80 வயதுக்கும் அதிகமான அவர் எழுத்தில் அவர் கை நடுங்குவதை அறிய முடிகிறது. இப்படிப்பட்ட உண்மையுள்ள ஆவிக்குரிய நல்ல அனுபவமுள்ளவர்களும், சில வாலிப வயது ஆயர்களும் எழுதிய கடிதங்கள் என்னை மிகவும் உற்சாகப்படுத்தின.

மற்றவர்கள் என்னை **புரிந்துகொண்டாலும்** சரி. **புரிந்து கொள்ளாமல் போனலும்** சரி. **அந்தி கிறிஸ்துவின்** இரகசிய திட்டங்களையும் தவறான நவீன உபதேசங்களையும் ஜாமக்காரன் வழியாக எழுதி CSI மக்களை **எச்சரித்துவிட்டேன்.** மாடரேட்டரின் ஆபத்தான உபதேசத்தை குறித்து அறிவித்துவிட்டோம் என்ற திருப்தி எனக்கு ஏற்பட்டுவிட்டது. அது போதும் !

## கேரளா மார்தோமா சபையில் நவீன உபதேசம்

**கேரளாவில் மார்தோமா** சபையில் அனேக ஆண்டுகளுக்குமுன் மார்தோமா சபைகளின் அதிகார பூர்வமான பத்திரிக்கையின் **சபா தாரகை** என்ற மாத பத்திரிக்கையில் ஒரு ஆயர் மிக அதிக டிகிரிகளை வாங்கிய அவர் எழுதின ஒரு கட்டுரை அதில் புதிய ஏற்பாட்டில் 6000 பிசாசுகள் பிடித்துள்ள **லேகியோன்** என்பவனை குறித்து அவர் எழுதியவதாவது. அந்த **லேகியோன்** ஒரு **மனநோயாளி** ஆகும். ஆனால் நம் வேதத்தில 6000 **பிசாசு பிடித்தவன்** என்று **எழுதியது தவறு. பிசாசு** என்பது இல்லை என்று எழுதினார்.

உடனே மார்தோமா சபை ஆயர்கள் அந்த பத்திரிகை செய்தியை போட்டோ காப்பி எடுத்து எனக்கு அனுப்பி இதற்கான சரியான விளக்கம் டாக்டர்தான் ஜாமக்காரனில் எழுதி மார்தோமா சபை மக்களை விளங்க வைக்க வேண்டும். நாங்கள் எழுதினால் அதை பத்திரிகையில் வெளியிடமாட்டார்கள். காரணம் அந்த பத்திரிகை ஆசிரியரின் முழு சம்மதத்துடன்தான் அந்த கட்டுரை வெளியிடப்பட்டது. அந்த பத்திரிகையின் ஆசிரியர் பிஷப் ஐரேனியஸ் அவர்களாகும். இப்போது அவருக்கு பதவி உயர்வு கிடைத்து முழு மார்தோமா சபைகளுக்கும் **தலைமை பிரதான பிஷப்பாக** உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறார். ஐரேனியஸ் அவர்களின் கோபத்துக்கு ஆளாக எங்களால் இயலாது என்று எழுதினார்கள்.

உடனே ஜாமக்காரனில் நான் எழுதினேன். பிசாசு என்பவன் யார் என்றும், **லேகியோன்** என்றால் யார் என்றும் விளக்கி எழுதினேன். லேகியோன் என்ற பெயர் அன்றைய **ரோம படையில்** 6000 வீரர்களை குறிக்கும் வார்த்தையாகும். 100 போர் வீரர்களின் தலைவன் **100க்கு அதிபதி** என்று அழைப்பதுபோல் **லேகியான்** என்றால் 6000 பிசாசுகள் குடிகொண்ட பிசாசு பிடித்த நபர் என்று அர்த்தம். அந்த கட்டுரையை எழுதிய ஆயர், எத்தனை டிகிரி வேதாகம கல்லூரியில் படித்திருந்தாலும் அவர் ஒரு **உண்மை கிறிஸ்தவர்** அல்ல. அவர் **பிசாசுக்கு** சிபாரிசு செய்கிற

பிசாசின் நண்பனாகும். இவர்களையெல்லாம் எதற்கு கிறிஸ்தவ சபைகளுக்கு ஆயராக ஊழியம் செய்ய வரவேண்டும் என்று ஆச்சரியமாக இருக்கிறது. அந்த குறிப்பிட்ட மார்தோமா ஆயரும் கிறிஸ்தவ **வேத புத்தகத்தை** விசுவாசிக்காதவர்கள் ஆகும். இவர்கள் நடத்தும் சபையை டையோசிஸ் மக்களை இவர்கள் எப்படி கிறிஸ்துவுக்கு நேராய் வழி நடத்துவார்கள். **அந்தி கிறிஸ்துவின்** கையிலிருந்து தங்கள் ஆடுகளை சபை மக்களை இவர்கள் எப்படி காப்பாற்றுவார்கள்? கிறிஸ்துவின் **இரண்டாம் வருகைக்கு** எப்படி சபை மக்களை ஆயத்தப்படுத்துவார்கள் என்று எழுதினேன்.

புதிய ஏற்பாட்டு புஸ்தகத்தில் எல்லா **சுவிசேஷத்திலும்** அவன் **பிசாசு பிடித்தவன்** என்றும் அந்த கிராம ஜனங்களை அவன்பயமுறுத்திக்கொண்டிருந்தான் என்றும் தெளிவாக எழுதியிருக்கிறதே ! இயேசு அவனிடத்தில் சென்று அந்த **பிசாசுகளை** விரட்டும்போது அந்த **பிசாசுகள்** தங்களை **பன்றிகளுக்குள்போகும்படி** அனுமதிக்கவேண்டும் என்றல்லவா இயேசுவிடம் வேண்டிக்கொண்டன ! என்றுதானே வேத புத்தகத்தில் தெளிவாக எழுதியிருக்கிறது !

Dr. புஷ்பராஜ் ஆகிய நான் **பங்காரபேட்டை** வேதாகம கல்லூரியில்படித்த நாட்களில் நான் ! ஆராய்ந்த **மூல பாஷையிலும்,** அனைத்து **மொழிபெயர்ப்பு** வேத புஸ்தகங்களிலும் பிசாசு என்றுதான் அந்த பாகத்தில்மொழிபெயர்த்திருக்கிறார்கள். இந்த ஆயருக்கு மட்டும் அவன்மன நோயாளி என்று யார் சொல்லிக்கொடுத்திருப்பார்கள் ?

இதற்கு பெயர்தான் **கள்ள உபதேசம்** அல்லது **நவீன உபதேசம்.** நான் ஜாமக்காரனில் எழுதிய விளக்கத்துக்கு அன்றைய **பிஷப் ஐரேனியஸ்** அல்லது கட்டுரை எழுதிய ஆயரும் மறுப்பு எதுவும் எழுதவில்லை. பிஷப் அவர்களின் பெயரை ஜாமக்காரனில் குறிப்பிட்டு நான் இந்த தவறுகளை சுட்டிக்காட்டியபோது மார்தோமா சபை ஆயர்கள் யாவரும் என்னை பாராட்டினர். அன்றைய நாளில் என்னை மிகவும் நேசிக்கும் மார்தோமா சபை பிஷப் திமோத்தேயு என்பவர் என்னை போனில் அழைத்து பாராட்டினார்.

அந்த சம்பவத்துக்கு பின்னும் பல வருடங்கள் மார்தோமா சபை ஆயர்களும் மற்றொரு பெரிய பிஷப்பான **ஜோசப்** அவர்களும் என்னை மார்தோமா சபையில் பெரிய பெரிய கண்வென்ஷனில் பிரசங்கிக்க அழைத்து என்னை உபயோகப்படுத்தினார்.

மார்தோமா சபையில் அன்றைய காலங்களில் வேறு பல நவீன உபதேசங்களையும் கண்டித்து ஜாமக்காரனில் எழுதினேன்.

இப்போது CSI சபையின் **மாடரேட்டர்** அவர்கள் எழுதிய **நவீன உபதேசங்களை** குறித்து விமர்சித்து ஜாமக்காரனில் நான் எழுதியது **மத்திய கேரள** பிஷப்பும், **மாடரேட்டருமான** Most Rev. தாமஸ் K. உம்மன் அவர்களுக்கு என்மேல் கோபம் உண்டானது. CSIயின் 24 டையோசிஸ்களை வழிதவற செய்ய முயன்ற அவரின் தவறான நவீன உபதேசத்தால் அவரும் கர்த்தரின் கோபத்துக்குள்ளானார்.

இன்னும் சில மாதத்தில் CSIக்கு புதிய மாடரேட்டரை, பிஷப்பை தெரிந்தெடுக்கப்போகிறார்கள். வரபோகிய புதிய, பிஷப் புதிய **மாடரேட்டர்** எப்படிப்பட்ட உபதேசத்தை கொண்டுவர போகிறார்களோ?

தெரியவில்லை, இப்போதே மத்திய கேரள டையோசிஸ் ஆயர்களும் சபை மக்களும் உபவாசித்து ஜெபிக்க தொடங்குங்கள், நம் கர்த்தர் சபைகளின்மேல் பாரம் உள்ளவராக இருக்கிறார்.


கீழே எனக்கு கடிதம் எழுதிய நபர் நல்ல ஆவிக்குரியவர், பழுத்த அனுபவம் உள்ளவர் தெய்வ பயம் உள்ளவர், என்னைப்போல் தவறுகளை கண்டித்து உணர்த்துகிறவர். வாசித்து பாருங்கள், பிசாசு எத்தனை வருடத்துக்கு முன்பாகவே நம் CSI சபைகளை கெடுக்க முயற்சி செய்துகொண்டே இருக்கிறான் என்பது விளங்கும். காரணம் பிசாசுக்கு தெரியும் அவனுக்கு கொஞ்சகாலம் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நன்கு அறிவான். ஆகவே வேகமக கிரியை செய்ய தொடங்கிவிட்டான், ஜெபிப்போம்

குறிப்பு : **ஜாமக்காரன் வாசகர்களில் ஒருவரும் வயது முதிர்ந்தவரும் வேத அனுபவ முதிர்ச்சி பெற்றவருமான திரு. டேவிட் ஐயா அவர்கள் ஜாமக்காரன் வாசகர்களுக்காக எழுதிய கடிதம்.**

**கர்த்தருக்குள் அன்பான சகோதரருக்கு,**

உங்கள் February -2019. ஜாமக்காரன் பத்திரிகையில் **CSI சபைகளுக்கு** ஆபத்து மற்றும் **அந்தி கிறிஸ்துவின் ஆட்கள் CSIக்குள் நுழைவு** என்ற கட்டுரைகளை வாசித்து கிறிஸ்துவுக்குள் அதிர்ச்சியடைந்தேன். நீங்கள் எழுதியிருக்கிற எல்லாவற்றிலேயும் என்னுடைய சிறிய பங்களிப்பை உங்களோடு பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டேன். ஆகையால் ஆண்டவருடைய வழிநடத்துதலின்படி இந்த கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

முதலாவது அந்தி கிறிஸ்து அநேக ஆண்டுகளுக்கு முன்பே WCCஐ **கைப்பற்றி ஆட்கொண்**டபின் அந்தி கிறிஸ்து CSIக்குள்ளே **மறைந்த** Rt. Rev. Samuel Amirtham, (Bishop of Trivandrum) அவர்களின் வழியாக உட்பிரவேசித்தான் என்று எழுதியிருக்கிறீர்கள். அந்த பிஷப், அவர்கள் வேதாகம கல்லூரி முதலவர் பதவி வகிக்கும் முன்பே **மதங்கள்** எல்லாம் ஒன்று, **எல்லா கடவுள்களும்** ஒன்று என்றெல்லாம் பேசவும், எழுதவும் துவங்கினார். அந்த சமயத்தில்தான் நீங்கள் **ஜாமக்காரனில்** இதைக் குறித்து அந்த காலத்திலேயே ஜாமக்காரனில் எழுதி **கிறிஸ்தவர்களை** எச்சரித்தீர்கள் . அதனால்தன் பிஷப் வழியாய் செய்த சாத்தான் சூழ்ச்சி **பலிக்காமல் போயிற்று.** நீங்கள் எழுதியது எந்த ஆண்டு என்று எனக்கு ஞாபகம் இல்லை.



**Rt.Rev. Samul**

என்றாலும் Bishop Samuel Amirtham அவர்கள் தனது கருத்தை View Point நியாயப்படுத்த பிரயாசப்பட்டார். அந்த பிரயாசத்தில் ஒன்றுதான் அவர் நாகர்கோவில் Home Churchல் வந்து விசுவாசிகளையும் ஊழியம் செய்கிறவர்களையும், பிரசங்கம் பண்ணுகிறவர்களையும் கூட்டி சேர்த்து நேரில் சமபாஷிக்க அவர்களை அழைத்து முக்கிய ஏற்பாடுகளை செய்தார். சந்திக்கும்படி நாகர்கோவிலுக்கு பிஷப் அவர்கள் நேரில் வருகை தந்தார்.

ஒரு மேசையை சுற்றி சுமார் **முப்பதுபேர்** உட்கார்ந்திருந்தோம். எனக்கு அழைப்பு கொடுக்கப்படாவிட்டாலும் எனது Brother in -law அவர்கள் அந்த கூடுகைக்கு என்னையும் அழைத்து சென்றார்.

**பிஷப் ஐயா அவர்கள் சொன்ன முதல் குறிப்பு :**

அங்கு கூடியிருந்த அனைவரையும் பார்த்து இவ்வாறு கேள்வி கேட்டார். நம் எல்லாருக்கும் **ஒரே கடவுள்** தானே? எந்த **மதமானாலும்** ஒரே **கடவுள்தானே** என்றார். அங்கே இருந்த எல்லாருமே அமைதியாய் **சம்மதம்** காட்டினார்கள்.

- ☐ **நான் மாத்திரம்** அதை ஏற்றுக்கொள்ளாமல் ஐயா! ஏதேன் தோட்டத்தில் சொல்லப்பட்ட சர்ப்பத்தின் அபிப்ராயத்தைப் பாருங்கள். சாத்தான் கூறியதாவது (ஆதி 3:4,5) அப்பொழுது சர்ப்பம் ஸ்திரியை நோக்கி : நீங்கள் **சாகவே சாவதில்லை.** (5) நீங்கள் இதை புசிக்கும் நாளிலே **உங்கள் கண்கள் திறக்கப்படும்** என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து **தேவர்களைப்போல்** இருப்பீர்கள் என்று **தேவன் அறிவார்** என்றது. இது **சர்ப்பத்தின்** அறிவு. அவன் ஏவாளிடம் குறிப்பிட்டது ஒரு **தெய்வம் அல்ல,** பல **தேவர்கள்** என்பதாகும். இதைக்கேட்டவுடனே **பிஷப்புக்கோ** மற்ற ஒருவருக்கும் என்கருத்தை மறுத்துக் கூறி ஒன்றும் சொல்ல இயலவில்லை.
- ☐ இனி நம்முடைய **ஆண்டவர் கூறிய** வார்த்தையை பார்ப்போம். யாத். 20:1-3ல் தேவன் பேசி சொல்லிய சகல வார்த்தைகளுமான (2) உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்தில் இருந்து புறப்படப்பண்ணின **உன் தேவனாகிய கர்த்தர் நானே** (3) என்னையன்றி **உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.**

அது மாத்திரமல்ல, 1 கொரி 8:5,6ல் வானத்திலேயும் பூமியிலேயும் **தேவர்கள் எனப்படுகிறவர்கள்** உண்டு. இப்படி அநேக **தேவர்களும்** அநேக **கர்த்தாக்களும்** உண்டாயிருந்தாலும் (6) **பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்**டு.

இப்படியிருக்க பிஷப் ஐயா ! எல்லா மதங்களிலும் கூறுவது **ஒரே கடவுள்** என்று நீங்கள் சொல்வது எப்படி? என்றேன். **பிஷப்புக்கோ** மற்ற ஒருவருக்கோ நான் கூறிய கருத்தை எதிர்த்து பதிலோ எதிர்போ இல்லை.

**பிஷப் ஐயா கூறிய இரண்டாவது குறிப்பு :**

எல்லாரும் **இயேசப்பா** ! இயேசப்பா ! என்று சொல்லி **இயேசப்பாவிடம்** ஜெபிக்கிறார்கள். **இது சரியா?** என்று கேட்டார்.

இதை அவர் சொன்னவுடன் அவருடைய உள்ளத்தின் **அந்தரங்க நோக்கத்தை** நான் அறிந்து கொணடேன். **இயேசு தெய்வம் அல்ல** என்றும் அவர் **சாதாரண மனிதன்தான்** என்று நிரூபிக்க வேண்டும் என்பதே அவர் நோக்கமாயிருந்தது.

அவர் தொடர்ந்து பேசப்போவதை கேட்க எல்லாரும் ஆயத்தமானார்கள். ஆனால் நான் பிஷப்பிடம் நான்கூறிய கருத்தில் என்ன **தவறு இருக்கிறது?** என்று கேட்டேன். பிஷப் அவர்கள் **கோபத்துடன் என்னை பார்க்க** அந்த கூட்டத்தில் பலரும் **இவன் ஏன் பிஷப்புக்கு எதிராக இப்படி** அவர் கருத்தை மறுத்து பேசுகிறான் என்று எரிச்சலோடு என்னை பார்த்தார்கள்.

நான் மறபடியம் அவரிடம் ஏசாயா 9:6ஐ சுட்டிக்காட்டினேன். நமக்கு ஒரு **பாலகன் பிறந்தார்.** நமக்கு **ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்.** கர்த்தத்துவம் அவர் தோளின்மேல் இருக்கும் அவர் **நாமம். அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன். ஆம் அவரே சர்வ வல்லமையுள்ள தேவன். நித்திய பிதா (ஆம், அந்த பாலகனே நமது நித்திய பிதா) சமாதான பிரபு** எனப்படும் என்றேன். அதன்பின் பிஷப் அவர்கள் தன் பேச்சை அப்படியே நிறுத்தி விட்டார்.

பொதுவாக **அந்தி கிறிஸ்து** என்று சொன்ன உடனேயே எல்லாரும் நினைப்பது அவன் **சரித்திர முடிவிலேதான் வருவான்.** அந்தி கிறிஸ்துவைபற்ற நம்மில் பலர் இப்படித்தான் நினைக்கிறோம். நிச்சயமாக அது சம்பவிக்க போகிறது. 1யோ. 4:3ல் எழுதியிருக்கிறபடி **மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை** அறிக்கை பண்ணாத **எந்த ஆவியும்** தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட **அந்தி கிறிஸ்துவின் ஆவியே** அது. **அது இப்போதே உலகத்தில் இருக்கிறது.** என்று இயேசுவின் சீசர்கள் உயிரோடு இருக்கும்போதே தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

☐ இந்த **அந்தி கிறிஸ்துவின்** ஆவி உலகத்தில் **முதலில் தோன்றிய** இடம் ஏதேன் தோட்டம் ஆகும், **இந்த ஆவி** குடிபுகுந்த **முதல் உள்ளங்கள்** ஆதாம்-ஏவாள் ஆகும். இப்பொழுதும் அந்த ஆவிதான் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் **கிரியை** செய்கிறது. நம் ஒவ்வொருவருடைய **சுயம்** (Free will) **அந்த ஆவியை** ஏற்றுக்கொள்ளவும்கூடும் அல்லது **இயேசுவின் சிலுவை** மூலமும் **பரிசுத்த ஆவியின்** நிறைவினாலும் அந்த **ஆவியை எதிர்த்து** போராடி **இயேசுவின் நாமத்தில்** நாம் **ஜெயம் பெற்று** கர்த்தருக்கென்று வாழவும் முடியும். இந்த **அசுத்த ஆவிதான்** CSIயிலும் புகுந்து CSIயில் உள்ள பலருடைய **அந்தரங்க வாழ்க்கையிலும்** கிரியை செய்கிறது.

உங்கள் மார்ச் மாத ஜாமக்காரனில் TV & பத்திரிகை செய்திகளைச் காணும்போது, **உலக முடிவை நெருங்கி விட்டோம் என்ற பயம்** பெரும்பாலான கிறிஸ்தவ சபை மக்களில் காணப்படவில்லை. **CSIயில் நுழையப்போகும் ஆபத்து** என்ற தலைப்பில் **CSI மாடரேட்டர்** அவர்கள் எழுதிய **நவீன உபதேச அறிவிப்புகளையும்** யாரும் **ஒரு பொருட்டாக எண்ணவில்லை** என்று தோன்றுகிறது என்று நீங்கள் **வருத்தத்தோடு எழுதியிருக்கிறீர்கள்.**

கிறிஸ்தவர்களில் பலர் தங்கள் **அந்தரங்க உள் வாழ்க்கையில்** ஏற்றுக்கொண்டிருக்கும் **அந்தி** கிறிஸ்துவை அறிந்தோமானால் இதன் காரணம் விளங்கும், 2 கொரி 11:3,4ல் ஆகிலும் **சர்ப்பமானது** தனது தந்திரத்தினாலே **ஏவாளை வஞ்சித்ததுபோல,** உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய சத்தியத்தினின்று **விலகும்படி கெடுக்கப்படுமோ** என்று பயந்திருக்கிறேன். (4) எப்படியெனில் **உங்களிடத்தில் வருகிறவன்** நாங்கள் பிரசங்கியாத **வேறொரு இயேசுவை** பிரசங்கித்தானானால் அல்லது நீங்கள்பெற்றிராத **வேறொரு ஆவியையும்** நீங்கள் ஏற்றுக்கொள்ளாத **வேறொரு சுவிசேஷத்தையும்** பெற்றீர்களேயானால் நன்றாய் சகித்திருப்பீர்களே

அந்தி கிறிஸ்துவின் **வேறொரு** இயேசு – வேறொரு ஆவி – **வேறொரு** சுவிசேஷம் இதை ஏற்றுக்கொள்ளும் விசுவாசிகளை குறித்து யோசிக்கும்போது இது ஏன் இவ்வாறு நடக்கிறது ? என்று யோசிக்கிறேன். என் அபிப்ராயத்தை இங்கு எழுதி உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கிறேன்.

வேதத்தை **அறிவுக்கேற்றதாய் மாத்திரம்** வாசித்து சொந்த அந்தரங்க உள் உணர்வு வாழ்க்கைக்கு, **பரிசுத்த ஆவியினால்** எடுக்க பிரயாசப்படாதிருத்தல்தான் இதற்கு காரணம் ஆகும்.

யோ 6:45 எல்லாரும் தேவனால் போதிக்கப்பட்டிருப்பார்கள் ---- ஆகையால் பிதாவினிடத்தில் **கேட்டு கற்றுக்கொள்கிறவன்** எவனும் என்னிடம் வருகிறான்.

பல விசுவாசிகள் **வேதத்தை** தங்கள் சுய அறிவினால் மாத்திரம் ஏற்று தேவனால் **உள் ஜீவியத்தில்** உணர விரும்புவதில்லை.

**லூக்கா 24:25** எம்மாவூருக்கு போன இருவரும் சீஷர்கள்தான். இயேசுவைக்குறித்துத்தான் பேசிக்கொண்டு போகிறார்கள். ஆயினும் இயேசு அவர்களை கடிந்துகொண்டு பேசினதை நமது அந்தரங்க வாழ்கைக்குள் நாம் எடுக்க தீர்மானித்தால் பயமாய் இருக்கும்.

(25) தீர்க்கதிரிசிகள் சொன்ன யாவையும் **விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே** (27) மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதிய எல்லா வேத வாக்கியங்களிலும் தம்மைக் குறித்து சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்து காண்பித்தார்.

**மத்தேயு 11:28-30** வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே **நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்.** நான் உங்களுக்கு **இளைப்பாறுதல் தருவேன்.** இந்த வசனத்தை எல்லா விசுவாசிகளும் தவறாமல் கை கொள்ளுகிறார்கள். எந்த ஒரு பிரச்சனை வந்தாலும் உடனே ஆண்டவரிடம் கொண்டு செல்லுகிறார்கள்.

ஆனால் அடுத்த வசனத்தை **வாழ்க்கை வழியாக விசுவாசிகள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?** என்பது கேள்விக்குறி - (29) **என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்** அப்பொழுது தான் **உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பறுதல்** கிடைக்கும்.

மத்தேயு 13:18-23 இது விதைகிறவனைப்பற்றின உவமைக்கு நமது அருமை இரட்சகர் சீஷர்களுக்கு கொடுத்த விளக்கமாகும். இந்த **நான்கு விதமான நிலங்களை** எல்லா **சபைகளிலும்** எல்லா **குடும்பங்களிலும்,** தனிப்பட்ட **நபர்கள் எல்லாரிலும்** காணலாம். நம்முடைய இருதயத்திலும், உள்ளத்திலும் வாழ்க்கையிலும் இவை உண்டு. **அனுதினமும்** கர்த்தருடைய பிரசன்னத்தினாலும், அவருடைய **பரிசுத்த ஆவியினாலும்** அவருடைய **இரத்தத்தினாலும்** நம்மை **நாம் அனுதின உழும் போது** முற்றிலும் இயேசுக்கு **நல்ல நிலமாக** அவருடை கிருபையினால் மறு ரூபமாவோம்.

ஜாமக்காரன் **வாசகர்கள் மத்தியிலும்** இந்த **நான்கு நிலங்கள்** உண்டு (வசனம் 19) **வழியருகே** விதைக்கப்பட்ட விதை - கேட்டும் உணராதிருக்கும்போது பொல்லாங்கன் விதைக்கப்பட்டதை பறித்துக்கொள்ளுகிறான். கற்பாறை நிலம், வேரில்லாமை, ஏன் – **சுயம்** விதையை வளர விடவில்லை. **சுயம்** எங்கே வளர்க்கப்படுகிறதோ அங்கே **ஜீவ விதை வளர இயலாது** (வசனம் 22) **முள்ளில் விதைக்கப்பட்ட** விதை உலக கவலை ஐசுவரியத்தின் மயக்கம்.

ஆயினும் இந்த பரந்த உலகத்தில் எல்லாவித உள்ளங்களில் **ஜீவவிதையை விதைக்கிற மனுஷ குமாரன்** (சங் 19, ரோமர் 1:17-20) (மத். 13:37) தனக்கென்று ஒரு **ஜனத்தை இதன்மூலம்** ஆயத்தப்படுத்துகிறார். அதுதான் **நல்ல நிலம்** (வசனம் 23) நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ **வசனத்தை** கேட்கிறவனும் **உணருகிறவனுமாயிருந்து** நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும், பலன் தரும் நிலமாக மாறுகிறான்.

**இந்த நிலம் சேர்ந்தவர்கள்** தான் **உங்களுக்கு** கர்த்தர் கொடுத்த **விளை நிலம்** Your Target Audience மற்ற **மூன்று நிலங்களில்** உங்களைக்கொண்டு விதைக்கப்படும் **ஜீவ விதைகள்** மனந்திரும்புதலுக்கென்று அந்த 3 நிலங்களும் இயேசுவுக்கு நல்ல நிலங்களாக மறுரூபம் அடைய விதைக்கப்படும் விதை.

**உங்களுக்கு** கர்த்தர் கொடுத்த இந்த **ஊழியத்தில்** நீங்கள் ஒரு விதத்திலும் சோர்வடையப் கூடாது என்ற நோக்கத்தில் இந்த கடிதத்தை கர்த்தர் உங்களுக்கு எழுதப்பண்ணினார்.

**ரோமர் 2:29 உள்ளத்தில்** யூதனானவனே **யூதன்** (உள்ளத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு சீஷனாய் இருப்பவனே கிறிஸ்தவன்) ஆவியின்படி **இருதயத்தில்** உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம் (ஆவியின்படி **இருதயத்தில்** உண்டாகும் **மறுபடி பிறப்பு, இருதயத்தில்** கர்த்தரால் தினமும்

உண்டாகும் ஞானஸ்நானம், ராப்போஜனம் தினந்தோறும் கர்த்தரால் இருதயத்தில் உண்டாகும் பரிசுத்த ஆவியின் பரிசுத்தத்தின் அபிஷேகம்) **இப்படிப்பட்டவனுகுரிய புகழ்ச்சி** மனுஷராலே அல்ல **தேவனாலே** உண்டாயிக்கிறது.


**ஜாமக்காரன் :** இந்த கடிதம் என்னை மிகவும் பெலப்படுத்தினது. அநேக பிஷப்மாரின் எதிர்ப்புகள், வெருப்புகள் மத்தியில் இப்படிப்பட்ட வயது முதிர்ந்த அனுபவஸ்தரைக்கொண்டு ஆவியானவர் எனக்காக எழுத வைத்ததை நினைத்து கர்த்தரை துதிக்கிறேன். எழுதிய ஐயாவுக்கு நன்றி கூறுகிறன்.

ஐயா சந்தித்த பிஷப் சாமுவேல் அமிர்தம் அவர்களின் கருத்தும் மாடரேட்டர் Most Rev. தோமஸ் K.உம்மன் அவர்களின் கருத்தும் ஒன்றாக இருப்பதை அறிய முடிகறது. பிஷப் அவர்களும் ஆயர்களும் ஒரு சில சபை விசுவாசிகளும் கொஞ்சம் யோசித்து பாருங்கள் . மாடரேட்டரை அவமானப்படுத்த அல்லது வேறு எந்த பிஷப்பையும் அவமானபடுத்தும் நோக்கத்தோடு எழுதவில்லை என்பதை உணருவீர்கள்.

**அந்தி கிறிஸ்துவின் நவீன உபதேசம் CSI க்குள் முதலில் நுழைய முயற்சித்த நாள் :**

1) இடம் : திருநெல்வேலி (சினாட் கூட்டங்கள் வருடத்துக்கு ஒவ்வொரு டையோசிஸில் உள்ள இடத்தில் நடத்துவார்கள். அங்கு 24 டையோசிஸ் பிஷப்மார்களும்,ஆயர்களும் D.C. மெம்பர்களும் கூடுவார்கள்.

நாள் : 1992 ஜனவரி 11-15




**இந்த சினாட் கூட்டத்தில் பிஷப்மார் செய்த ஜெபத்தின் ஆரம்பம் இதுதான்: (ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது):**

**எங்கள் தேவனே,**

**உம் மன உருக்கத்தை இயேசுவில் காண்கிறோம்,**
**நீரே சிவனாயிருந்து தயையுள்ளவராயிருக்கிறீர்**
**நீரே அல்லாவாக இரக்கமுள்ளவராக இருக்கிறீர்**
**நீரே புத்தர்கள் ஆராதிக்கும் மனஉருக்கமான புத்தராக இருக்கிறீர்.**
**தாமரை பூக்களை கையில் ஏந்தி உம்மை சுற்றி வந்து உம்மை வணங்குகிறோம்.**

**இப்படி கூட்டத்துக்கு வந்தவர் அனைவரும் துதித்தவுடன், அனைத்து பிஷப்மாரும் ஆமென் என்றார்கள். ஆமென் என்றால் அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தமாகும்.**

**இயேசுவே நீரே அல்லா, நீரே சிவன், நீரே புத்தன்,** உம்மை தாமரை பூக்களால் மூன்று முறை வலம் வந்து நமஸ்கரிக்கிறோம். ஆராதனை செய்கிறோம் என்று அந்தி கிறிஸ்டதுவின் ஆட்கள் ! இது எத்தனை பெரிய தேவ தூஷ்ணம்.

அதே ஆராதனை கிரமத்தை அனைத்து CSI சபையின் ஆராதனை புத்தகத்திலும் சேர்த்து அனைத்து CSI சபை மக்களையும் ஆராதிக்கவைக்க இவன் எடுத்த முயற்சியை இந்த ஜாமக்காரனால் தான் முறியடிக்கப்பட்டது.

### 2) அந்தி கிறிஸ்துவின் ஆட்களின் இரண்டாவது முயற்சி


இடம் : சினாட் சென்டர், சென்னை

நாள் : 2017 ஏப்ரல் 22

தலைப்பு : Earth Day

Church of South India

**Department od Ecological Concerns**




### 3) அந்தி கிறிஸ்துவின் ஆட்களின் மூனறாவது முயற்சி

இடம் : சினாட் சென்டர், சென்னை

நாள் : 2017 ஏப்ரல் 22

தலைப்பு : Earth Day



4) **அந்தி கிறிஸ்துவின் ஆட்களின் நான்காவது முயற்சி**

இடம் : ஒத்தெரா (Eden Eco-Spirituality Centre)

நாள் : 2017 செப்படம்பர் 1ம் தேதி

5) **அந்தி கிறிஸ்துவின் ஆட்களின் ஐந்தவது முயற்சி**

இடம் : கொடைக்கானல் தமிழ்நாடு

நாள் : 2018 மார்ச் 7ம் தேதிம

வெளியிட்டவர் Most Rev. தாமஸ் K. உம்மன்

அறிக்கையன தலைப்பு : லெந்துகால தியான செய்தி

1) சுற்றுச் சூால் பாதுகாப்பு கட்டளைகளை Green Convenant
பூமி உயிருள்ளது, பூமிக்குள்ளும் கடவுள் இருக்கிறாா்.

2) பாலின சமத்துவம்
(Gender Equality, Gender Equality beginning with the Church,
***The Journey Continues...***



**Most Rev.**

**ஜாமக்காரன் :** அன்பானவர்களே எழுதிய விவரத்தையே திரும்ப எழுதுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இதுவரை CSI சபைகளுக்கு நன்மையைதான் செய்துவந்தேன். CSI சபை எப்படியாவது இரட்சிக்கப்பட வேண்டும். வசனத்தில் வளர வேண்டும் என்று CSIயின் 24 டையோசிஸ் சபைகளிலும் போதித்து வந்தேன். மேலே கூறப்பட்ட நவீன உபதேசம் இதுவரை எங்கள் டையோசிஸ்ஸில் வரவில்லை என்று சிலர் என்னிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மொத்தம் நான்கு டையோசிஸ்களில் 3வது பாலினத்தவரை சபை பொருப்பில் வைக்கவும், இயற்கையின் வேதாகமம் Earth Bible உபதேசத்தை செயல்படுத்தவும் அறிக்கை வெளியிட்டு அதை செயல்படுத்த ஏற்பாடுகள் செய்து விட்டார்கள்.

ஆனால் மத்திய கேரளா போன்ற சில டையோசிஸ்களில் மாடரேட்டர் திட்டம் எதுவிம் எங்களை பாதிக்கவில்லையே என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். வேதத்தில் எஸ்தரிடம் மொர்தேக்காய் கூறியதுபோல அந்தி கிறிஸ்து எங்களிடம் செயல்படவில்லை என்று நினைக்காதே. மற்ற இடங்களில் செயல்பட்டு குடும்பமாய் அவன் வெட்டிய குழியில் விழும்போது நீ தப்புவாய் என்று நீ உன் மனதில் நினைவு கொள்ளாதே – நீங்களும் அவன் வெட்டிய நவீன உபதேச குழியில் விழும்போது அப்போது உயருவீர்கள். டாக்டர் புஷ்பராஜ் அதிகாரத்தால் விலக்கி வைக்கலாம் ஆனால் CSI சபைகளுக்கு இரட்சிப்பு வேறு இடத்தில் இருந்து எழும்பும். அப்போது நீங்கள் அவன் உபதேசத்துக்கு கீழ்படியும் உங்கள் குடும்பமும் அவன் உண்டாக்கிய உபதேச குழப்பத்தில் விழுவீர்கள். அப்போது உங்களுக்கு உபதேசிக்க உங்களை விடுவிக்க யாரும் இருக்கமாட்டார்கள். எஸ்தர் 4:13,14 Dr. புஷ்பராஜ் ஆகிய என்னை கொண்டு கர்த்தர் நடப்பித்த எச்சரிப்பின் வேலை, அறிவிப்பின் வேலை முடிந்தது. ஆனால் என் உயிர் உள்ள அளவும் என் ஜாமக்காரன் பத்திரிகை மூலமாய் கர்த்தர் அறிவிக்க வேண்டியதை அறிவித்துக்கொண்டே இருப்பார். காதுள்ளவன் கேட்கக்கடவன். உங்கள் எல்லாருக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கிறேன். என்னை புரிந்துகொண்டு எனக்காக ஜெபிப்பவர்கள், உதவிபவர்கள், ஆயர்கள், பிஷப்மார், விசுவாசிகள் யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

# தெய்வம் உணர்த்திய குடும்பங்கள்

கடந்த **56 வருடங்களாக** நான் செய்யும் மலைகளில் வாழும் **ஆதிவாசிகளிடையே** செய்யும் ஊழியம், **ஜாமக்காரன்** (காவல்காரன்) **மாத பத்திரிகை** ஊழியங்களை இந்தியா முழுவதும் உள்ள மாநிலங்களான **காஷ்மீர்** (SRINAGAR) முதல் **கன்னியாகுமரி** வரை ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள என் **ஜாமக்காரன் வாசக குடும்பங்களுக்காக** என் தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை **துதிக்கிறேன்.**

மார்தோமா Evangelical Church in India, CNI, CSI, மெத்தடிஸ்ட் ECI லூத்தரன் (TELC, ALC) **சபைகள்,** Advents Churches, Baptist Churches, (SBM, BM) **பெந்தேகோஸ்தே சபைகள்,** CPM, IPC, AG, Church of God in India, Church of God, இரட்சன்ய சேனை சபை Salvation Army. இதே சபைகளை சேர்ந்த வெளிநாடுகளில் **வாழும் ஜாமக்காரன் வாசகர்கள் (மலையாளிகள் – தமிழர்கள்) என்று பல குடும்பங்கள்** இந்த நிமிஷம் வரை **ஜெபத்தினாலும் பண உதவிகளினாலும்** தொடர்ந்து மேலே நான் குறிப்பிட்ட என் **இரண்டு விதமான ஊழியங்களை** இவர்கள் யாவரும் என்னை தாங்கிவருவதால் இன்றுவரை **கடன் இல்லாது** எந்த குறைகளும் இல்லாமல் **நானும்** என் **மனைவியும்** சகல ஆரோக்கியத்தோடும் ஊழியம் செய்து வாழ்கிறோம். கர்த்தருக்கே சகல மகிமையும்,கனமும் உண்டாதாக.

## இது கர்த்தரால் வந்தது

இதுவரை **பணம் வேண்டும்** என்று **யாரிடமும் நான் கேட்டதில்லை, ஜாமக்காரன்** பத்திரிகை வழியாகயும் **மறைமுகமாக** என் **பண தேவைகளை** கூறியதுமில்லை, பத்திரிகையிலும் அதைப்பற்றி நான் எழுதியதில்லை.

## என் ஊழிய வெற்றியின் இரகசியம் என்ன ?

**என் ஊழிய தேவைகள்** எதுவானாலும் என் கர்த்தர் அதை அறிவார் அவைகளை என்னை ஊழியத்தில் அனுதினமும் வழி நடத்தும் **என் கர்த்தர்** அவைகளை குறித்து எனக்காக ஜெபிக்கும் **என் வாசகர்களின் உள்ளத்தில்** உணர்த்துவார். உடனே அவர்கள் **தங்கள் காணிக்கைகளை** எனக்கு அனுப்புகிறார்கள். ஊழியத்தில் என் **பண தேவைகள்** கூடும்போது எப்படித்தான் **என் வாசக குடும்பங்கள் அறிகிறார்களோ** ! தெரியவில்லை! திடீரென்று **வழக்கமாக அனுப்பும் பணத்தை விட அதிகமான தொகையை அவர்களாகவே அனுப்புவார்கள்**! இதுதான் என் தேவைகளை அறியும் கர்த்தர் என் வாசகர்கள் மூலமாக நடப்பிக்கும் **அற்புத ஏற்பாடாகும்.** இதுதான் குறைவுபடாத என் **ஊழியத்தின் இரகசியம்** ஆகும்.

- ☐ உதாரணமாக கடந்த 45 வருடங்களாக ஒரு ஏழை குடும்பம் 20 ரூபாயை மணி ஆர்டர் மூலமாக **ஒவ்வொரு மாதமும்** அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த **20 ரூபாய்க்கு** மணி ஆர்டர் **கமிஷன்** எவ்வளவு இருக்குமோ எனக்கு தெரியாது ! அந்த **20 ரூபாய்** மணியார்டர் பணத்தை நான் கையில் வாங்கியதும் **நன்றியோடு** ஆண்டவரை துதிப்பேன். பல சமயங்களில் அவர்களுக்கு நானே என் **கைபட நன்றி கூறி ரசீதில் பதில் எழுதுவேன்** அவர்கள் ஒரு நாள் எனக்கு எழுதிய பதிலில் ஐயா ! **பல வருடங்கள்** உங்கள் பத்திரிகையினால் நாங்கள் அநேக **வேத வசன இரசியங்களை** வாசித்து

அறிந்து பயன் அடைந்துள்ளோம். இத்தனை வருடங்கள் **சந்தா** என்று கேட்டும் அல்லது **பண தேவை** என்று கேட்டும் உங்கள் பத்திரிகையில் நீங்கள் **ஒரு வார்த்தை** கூட எழுதாததை உணர்ந்தேன். என் கணவரால் எழுந்திருக்க முடியாது. நான் மட்டும் கூலி வேலை செய்கிறேன். நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து ஜெபித்து கையில் உள்ள 20 ரூபாயையாவது டாக்டருக்கு அனுப்புவோம் என்று பேசி தீர்மானித்தோம். மிகச் சிறிய தொகையான 20 ரூபாய் அனுப்பினால் அதை டாக்டர் நிச்சயம் தவறாக நினைக்கமாட்டார். சிறிய தொகையான 20 ரூபாய் அனுப்புகிறதினால் கர்த்தரை நாங்கள் அலட்சியபடுத்தவில்லை என்று கர்த்தரும் அறிவார் என்று அவர்கள் எழுதிய அந்த கடிதத்தில எழுதினார்கள். அந்த ஏழை குடும்பத்துக்கு எத்தனை பெரிய நன்றி உள்ளம் பாருங்கள். **சிறு துளி பெரு வெள்ளம்.** இப்படி **சிறிய** தொகையும் **பெரிய** தொகையுமாக மாதா மாதம் அல்லது **இரண்டு மாதத்துக்கு** ஒருமுறை என்று ஒவ்வொரு வாசகரும் கர்த்தரால் உணர்த்தப்பட்டுதான் **இந்த காணிக்கைகள்** யாவும் எனக்கு வந்து சேருகிறது. இந்த அற்புதமான வழிநடத்துதல் **வேரு எந்த ஊழியருக்கும் கிடைக்காத பாக்கியம்** ஆகும் என்று கருதுகிறேன்.

அதனால்தான் **என் வாசகர்களை** நினைத்து **பெருமைப்படுகிறேன்.** கர்த்தருக்கும் நானும் என் மனைவியும் நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம்.

☐ **கர்த்தரிடம் நாம் உண்மையாக இருந்தால் கர்த்தரும் நம்மிடம் உண்மையாக இருப்பார்.**

---

# கன்னியாகுமரி C.S.I. டையோசிஸ்

## மாங்கரை சபையின் 152வது சபை நாள் கண்வென்ஷன்



மாங்கரை ஆயர் மண்டல கண்வென்ஷன் 152வது சபை நாளை நினைவு கூர்ந்து நடத்தப்பட்டஆவிக்குரிய கூட்டங்கள் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

சனிகிழமை ஆலோசனை நேர கூட்டத்தில் திருவனந்தபுரம் கனியக்காவிளை, ஆகிய இடங்கிளிலிருந்தெல்லாம் ஜெபத்துக்காகவும்,ஆலோசனைக்காகவும் மக்கள் வந்திருந்தனர். கூட்ட் ஏற்பாடுகளை Rev. M. Albert S. Gnanadass அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

கூட்டங்கள் ஆசீர்வாதமாக நடந்தேறின. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

# குடி உரிமை திருத்தச் சட்டமா ?
# குடி உரிமை மறுப்புச் சட்டமா ?

**ஜாமக்காரன்** வாசகர்கள் நம் இந்திய அரசியல் பிரச்சனைகளை அறிந்திருப்பது மிக அவசியம், குறிப்பாக ஊழியர்கள் நாட்டு நடப்பு விவகாரங்களை ஒவ்வொரு நாளும் TV மூலமாகவோ, பத்திரிகை மூலமாகவோ அறிந்து வைத்துக்கொள்வது மிக அவசியம். நாட்டுக்காக ஆளுகிறவர்களுக்காக, அதிகாரிகளுக்காக ஜெபிக்க நாட்டு நடப்பு விவரங்கள் மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

**குடியுரிமை சட்ட மசோதா என்றால் என்ன ?** அதன் முக்கிய அம்சங்கள்தான் என்ன? அதை ஏன் **மக்கள் எதிர்கிறார்கள்!** ஒரு சிலர் அதை **ஆதரிக்கிறார்கள்.** இவைகளைப்பற்றி ஒவ்வொன்றாக பார்ப்போம்.

**குடியுரிமைச்** சட்ட மசோதாவில் தற்சமயம் சில **திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன**. அதாவது சட்ட விரோதமாக **வெளி** நாடுகளிலிருந்து அல்லது **அண்டை** நாடகளிலிருந்து நம் நாட்டில் வந்து **வாழ்ந்து வருபவர்களுக்கு** குடியுரிமை அளிக்கப்படும். சரி அந்த குடியுரிமை எந்த மாதிரி மக்களுக்கு அளிக்கப்படும்? அவர்கள் **இந்துக்கள்,** சீக்கிய மதத்தினர், **புத்த மதத்தினர்,** சமணர்கள், **பார்சிய** மற்றும் **கிறித்துவர்**களாக இருந்திடவேண்டும். **குறிப்பாக** அவர்கள் **ஆப்கானிஸ்தான்** வங்கதேசம், **பாகிஸ்தான்** சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் டிசம்பர் 2014க்கும் முன்பாக நம் இந்திய நாட்டிற்குள் வந்து இருக்கவேண்டும். இதுதான் சமீபத்தில் **போராட்டத்துக்கு பின்** நிறைவேற்றப்பட்ட **புதிய குடியுரிமை திருத்தச் சட்டத்தின் சுருக்கம்,** சரி முதலில் இதை **ஆதரிப்பவர்களின்** வாதம் என்ன என்பதை பார்ப்போம் !

1947 இந்தியாவிலிருந்து **பாகிஸ்தான்** பிரிக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கில் **இந்துக்கள்** பாக்கிஸ்தானில் **கொல்லப்பட்டு** அவர்களின் **உடல்கள்** அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்டன. பல போராட்டங்கள், சிக்கல்களுக்கு பிறகு 1950ல் மறைந்த முன்னாள் **பிரதமர் நேருவுக்கும்** பாகிஸ்தானுக்கும் ஒரு **உடன்பாடு ஏற்பட்டது.** அதாவது **பாகிஸ்தானில்** உள்ள **சிறுபான்மையினருக்கு** ஒரு காலத்தில் ஒரே இந்தியாவாக நம் நாட்டோடு இனைந்திருந்த நம் நாட்டின் குடிமக்களான **இந்துக்கள்,** சீக்கியர்கள், **சமணர்கள்,** கிறிஸ்துவர்கள் ஆகியோருக்கு) **எல்லா உரிமைகளையும் தர வேண்டும்** என்று **அந்த ஒப்பந்தத்தில்** குறிப்பிடப்பட்டது.

அதே போல் **இந்தியாவும்** இங்குள்ள **சிறுபான்மையினருக்கு** வழிபாட்டுத்தலங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவைகளில் **விசேஷமாக** சலுகைகள், **உரிமைகள்** அளித்திட வேண்டும் என்பதுதான் **அந்த ஒப்பந்தத்தின் சராம்சம்.** இந்தியா **அதை இன்று வரை** முறையாக நேர்மையாக உலகில் உள்ள அனைத்து நாடுகளும் பாராட்டும் வண்ணம் **கடைபிடித்து வருகின்றது.**

ஆனால் பாகிஸ்தானில் ????? நிதர்சன உண்மை என்ன ?

அங்குள்ள **இந்துக்கள், கிருத்துவர்கள், சமணர்கள்** போன்ற மூஸ்லீம் அல்லாத பிற மதத்தினர் துன்புறுத்தப்பட்டு **இரண்டாம்தரக் குடிமக்களாக** வாழ்ந்து வருகின்றனர். பலர் திடீரென்று மாயமாகி இன்றுவரை கண்டுபிடிக்க முடியாமல் அவர்களது குடும்பத்தினர் **ஆபத்தான கட்டத்திலேயே** அங்கு வாழ்ந்து வருகின்றனர். இதே நிலைமைதான் அன்டை நாடான **வங்காளதேசம், ஆப்கானிஸ்தானிலும்** நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அங்கிருந்து துரத்தப்பட்ட இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட மதத்தினர் **இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.** அவர்கள் குறிப்பிட்ட காலம் வரை அதாவது **பதினோரு ஆண்டுகள்** இங்கு வாழ்ந்து வந்தால் அவர்களுக்கு **குடியுரிமை சட்டப்பூர்வமாக வழங்கப்பட வேண்டும்** என்பது எல்லாத் தரப்பினராலும் அனைத்து கட்சியினராலும் நவம்பர் 2019 வரை கோரிக்கையாக விடப்பட்டு வந்தது.

ஆனால் தற்பொழுது அந்த **குடியுரிமைச் சட்டத்தை** அமல்படுத்தியவுடன் இது **இஸ்லாமியர்களுக்கு எதிரான சட்டம்** என்று தவறான முறையில் பிரச்சாரம் செய்து வன்முறையை விதைத்து வருகிறார்கள் என்பது இந்த **குடியுரிமை சட்ட ஆதரவாளர்களின் வாதம்.** அவர்கள் குறிப்பிடுவது இங்கு இந்தியாவில் **காலம் காலமாக வாழ்ந்து வரும் இஸ்லாமியர்களுக்கு** இந்த சட்டத்தால் எந்தவித **பாதிப்பும் இல்லை.** அவர்களிடம் சென்று யாரும் எந்தவித புள்ளிவிவரமும் எடுத்து அவர்கள் குடியுரிமை பற்றிக் கேட்கப்போவது இல்லை. ஏனென்றால் அவர்கள் அனைவரும் இந்தியர்கள்தான், இந்த குடியுரிமை சட்டம் **பிற நாடுகளிலிருந்து** இங்கு வந்து வாழ்ந்து வருபவர்களுக்கு நிம்மதியாக வாழ்ந்திட ஒரு உரிமையை இந்தச் சட்டம் அளிக்கின்றது.

- ☐ **இலங்கைத் தமிழர்கள் நிலைமை வேறு,** இலங்கைத் தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் **தோட்டத் தொழிலாளர்கள்** என்று இரண்டு வகையான **தமிழர்கள்** இலங்கையில் உள்ளனர். பொதுவாக இங்கு அகதிகளாக தமிழகத்திற்கு வந்துள்ள **ஈழத் தமிழர்கள்** அங்கு திரும்பச் சென்று வாழவே விரும்புகின்றனர். ஆனால் இந்தியாவில் குடியேறிய **இலங்கைத் தமிழர்களுக்கு** இந்திய **குடியுரிமை** வழங்கினால் நிச்சயமாக இப்போதைய புதிய **இலங்கை அரசினுடைய** தவறான அடிப்படை நோக்கத்திற்கு **உதவுவதாக** ஆகிவிடும். அதாவது இலங்கைத் தமிழர்கள் இங்கு **இந்திய குடியுரிமைப் பெற்றுவிட்ட பிறகு** அவர்கள் **இலங்கைக்கு** திரும்பிச்செல்ல முடியாது அல்லவா? **தமிழர்களை முற்றிலுமாக இலங்கையிலிருந்து** விரட்டியடித்து விட்டு முற்றிலும் **சிங்களர்கள்** மட்டுமே **இலங்கையில் இருக்க வேண்டும்** என்பதுதானே அந்த நாட்டின் அரசின் இரகசிய லட்சியம். இப்பொழுது நாம் இங்குள்ள **இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை வழங்கியதும்** மேலும் மேலும் இலங்கையிலிருந்து கூடுதல் தமிழர்களை இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு **துரத்திவிட மாட்டார்கள்** என்பது என்ன நிச்சயம்? நிச்சயம் தமிழர்களை துரத்திவிடும் திட்டம் அவர்களிடம் இப்போது உண்டு என்று அறியப்படுகிறது.

ஆக அங்கிருந்து (இலங்கையிலிருந்து) **வரும் தமிழர்களுக்கு** நாம் குடியுரிமை வழங்க ஆரம்பித்தால் அது **இலங்கை** தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசின் **இரகசிய திட்டத்துக்கு** கிடைத்த மறைமுகமாக வெற்றியாகிவிடும் அபாயம் உண்டு. அதற்குப் பதில் அவர்களுக்கு **மூன்று**

**ஆண்டு** அல்லது **ஐந்து ஆண்டுகளுக்கு** ஒருமுறை **புதுப்பித்துக் கொள்ளக்கூடிய** நிபந்தனைகளுடன் கூடிய தற்காலிக **விசாவை** வழங்கலாம். இதனால் மேலும் அவர்கள் **வெளிநாட்டில்** சென்று **அவர்களது உறவினர்களை** சந்திக்க அவர்களுக்கு **தற்காலிக பயண பர்மிட் பாஸ்போர்ட்** வழங்கலாம் என்பது சாத்தியமானது என்பதே **குடியுரிமைச் சட்டத்தை ஆதரிப்பவர்களின் வாதம்.**

**இப்பொழுது குடியுரிமைச் சட்டத்தை எதிர்ப்பவர்களின் வாதத்தைப் பார்ப்போம்.**

குடியுரிமைச் சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்றும்போது **இஸ்லாமியர்கள்** தவிர மற்ற மதத்தினருக்குத்தான் **இந்த குடியுரிமை கிடைத்திடும்.** ஏனென்றால் **இஸ்லாமியர்கள்** மற்ற நாடுகளில் **துன்புறுத்தப்படுவதில்லை** என்று **குடியுரிமை சட்டத்தை எதிர்பவர்கள்** கூறிய அந்த **ஒரு வாசகம்** உலகிலுள்ள **அனைத்து இஸ்லாமியர்கள்** மனதிலும் **ஒரு வேதனையை** ஏற்படுத்தி விட்டது. ஏனென்றால் **பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பங்ளாதேஷ்** நாடுகளிலும் சில குறிப்பிட்ட பிரிவின் **இஸ்லாமியர்கள்** தொழுதுகொள்ளும் பள்ளிவாசல்களிலேயே (மசூதிகளிலேயே) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போதே இரக்கம் இல்லாமல் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இவர்கள் அதே நாட்டில் பிறந்து வளர்ந்திருந்தாலும் **அந்நியர்களாக** நடத்தப்பட்டு **இரக்கமில்லாமல் கொலை செய்யப்பட்டு** வருகிறார்கள். அவர்களும் **மனிதர்கள்தானே !** அவர்களும் **அல்லாவை** தொழுதவர்கள் தானே !

☐ **இந்திய இஸ்லாமியர்களுக்கு ஏற்பட்ட 3 வித பாதிப்பு**

(1) சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் தற்பொழுது சிறுபான்மையினராக உள்ள **இஸ்லாமியர்கள்** மத்தியில் **பதற்றமும் கவலையும்** பெரிய அளவில் ஏற்பட்டிருக்கின்றது. மத்திய அரசு **முத்தலாக் சட்டம்** என்பதை நிறைவேற்றி அடிப்படையியான **இஸ்லாமியர்களின் மதக் கொள்கையில்** தலையிட்டபொழுதுகூட அவர்கள் அதை **அமைதியாக ஏற்றுக்கொண்டனர்.**

**(2) இஸ்லாமியர்கள்** அதிகம் வாழும் **காஷ்மீரில் இஸ்லாமியருக்கு கொடுக்கப்பட்ட விசேஷ அந்தஸ்தை 370 பிரிவு** மூலம் ரத்து செய்ததையும் அவர்கள் **அமைதியாக ஏற்றுக்கொண்டார்கள்.**

(3) தற்பொழுது **அவசரகதியில் ஏற்பட்டுள்ள** குடியுரிமை **திருத்தச் சட்டத்தை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.**

அதனால்தான் இந்தியாவில் அனைத்து மாநிலத்திலும் இஸ்லாமியருக்குள்ளே தற்போது **பதட்டமும்**, கவலையும், அச்சமும் அதிகரித்துள்ளது. உதாரணத்துக்கு **மேற்கு வங்காளத்தில்** வங்காள மொழி பேசும் **இந்துக்களும், இஸ்லாமியர்களும்** ஏராளமாக உள்ளனர். அங்கே **வங்காள மொழி** பேசும் **முஸ்லீம்களையும்** நாடு விட்டு நாடு வந்திருக்கும் **வங்காள தேசத்து உருது பேசும் மற்ற இஸ்லாமியர்களையும்** எப்படி **பிரித்து பார்க்க முடியும்**. மொழிதான் வித்தியாசம், ஆனால் அவர்கள் **அனைவருமே இஸ்லாமியர்களே.** ஏற்கனவே பல வருடங்களாக **மேற்கு வங்காளத்தில் வாழும் இஸ்லாமியர்கள்** தங்களுடைய **ஆதார் அட்டை,** ரேஷன் கார்டு போன்றவற்றை எடுத்துக்கொண்டு வந்து நாங்கள் **பல வருடங்களாக** இந்தியாவில் தான் வாழ்கிறோம். **எங்கள் குடியுரிமையை ரத்து செய்து விடாதீர்கள்** என்று கெஞ்சவிடுவது உண்மையில் தேவையா?

!



## அசாம் பிரச்சனை

நடுநிலையாளர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். **அஸ்ஸாமில் ஆதார் கார்டு**, வாக்காளர் அட்டை, **பாஸ்போர்ட்** வைத்திருந்தவர்கள் கூட சமீபத்தில் நடந்த புள்ளிவிவரத்தின்படி அவர்களை **குடியுரிமை பெற முடியாமல்** ஆக்கிவிட்டால் அவர்களை பார்த்து **நீங்கள் இந்தியர்களே அல்ல** என்று வழக்கம்போல் **அரசு அதிகார மையம், அறிவிப்பு** மையம் **அறிவிப்பு பலகையில் வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.** அந்த அசாம் மாநில மக்கள் அதைப்பற்றி எங்கு புகார் அளிப்பார்கள்? என்ன செய்யலாம் என்று இப்போது **நிர்கதியாக நின்று கொண்டிருக் கிறார்கள்**! இதுபோன்ற ஒரு **குடியுரிமை சட்டம் இந்த சூழ்நிலையில் அவசியம் தேவையா?**

## இந்தியாவின் மற்றொரு சாராரின் கேள்வி என்ன ?

இந்தியா முழுவதும் **பொருளாதாரம்** நலிவடைந்த நிலையில் **வேலை வாயப்பகள் இன்**றி இளைஞர்கள் தவித்துக்கொண்டிருக்கும் இந்த நிலையில் இதுபோன்ற ஒரு குடியுரிமைச் சட்டம் **இப்பொழுது அவசியம் தேவையா?** என்பது மற்றொரு **சாராரின் கேள்வி.** இதுபோன்ற பலவித ஐயப்பாடுகள் இடையே சிக்கித் தவிக்கும் இந்திய மக்களிடையே குடியுரிமை திருத்தச் சட்டத்தைப் பற்றிய **முழு விளக்கங்களையும்** படிப்படியாக மக்கள் மனதில் புரியவைத்து **சமூக ஆர்வலர்களும், நடுநிலையாளர்களும் போராட்டம் செய்திடும் மாணவர்கள், இஸ்லாமியர்கள் ஆகிய அனைவரையும் ஒன்று சேர்த்து** முறையாக **பேச்சுவார்த்தை நடத்தி** இந்த **குடியுரிமைச் சட்டத்தை அமலாக்க** மத்திய அரசு முடிவெடுத்திட வேண்டும். இந்த குடியுரிமை சட்டப் பிரச்சனையிலும் **140 கோடி** இந்திய மக்களில் **ஒரே ஒரு நபருக்கு** கூட இந்த **குடியுரிமை சட்டத்தால் பாதிப்பு** ஏற்படாது என்பதை அரசு மக்களுக்கு **புரிய வைத்திட வேண்டும்.** உறுதி கொடுக்க வேண்டும்.

## இஸ்லாமியர் & கிறிஸ்தவர்களுக்கு வரப் போகிற ஆபத்து

மேலே **குடி உரிமை திருத்தச் சட்டம்** பற்றியும் **குடி உரிமை மறுப்புச் சட்ட விபரம் பற்றியும்** வாசித்தீர்கள். இதிலே உள்ள **ஆபத்து** என்ன? சிறுபான்மையினரான **இஸ்லாமியர், கிறிஸ்தவர்களுக்கு** வரப்போகும் **மறைமுக ஆபத்து** உன்று உண்டு, அது என்ன என்பதற்கு ஒரு சிறு உதாரணம்.

நமது இந்தியாவின் **உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா** அவர்கள் குடி உரிமை சட்டத்தால் **ஒரு முஸ்லீம் மதத்தினரின் உரிமையாவது இதுவரை பறிக்கப்பட்டதாக யாராவது கூறமுடியுமா?** என்று சவால் விட்டிருக்கிறார்.

**உள்துறை** அமைச்சர் திரு. **அமித்ஷா** அவர்களுக்கு இந்திய வரலாறு தெரியவில்லையா? அல்லது தெரியாததுபோல் பேசுகிறாரா என்பது புரியவில்லை !

**உதாரணம் 1** நம் இந்திய தேசத்துக்காக **கார்கில் போரில்** உயிரை பணயம் வைத்து போராடி இந்தியாவிற்கு வெற்றி தேடி தந்தவர்களில் ஒருவரான **முஸ்லீம்மத** போர் வீரர் திரு. **முகம்மது உல்லா** அவர்களுக்கே **இந்திய குடிமக்கள் பதிவேட்டு சட்டத்தின்படி** (NRC) இந்திய **குடிஉரிமை மறுக்கப்பட்டு** அந்த போர் வீரரை NRC **சட்டப்படி அவர் இந்தியர் அல்ல** என்றும் அவரை குடியேறி என்றும் கூறி **ஜெயலில் அடைக்கப்பட்ட கொடுமை** அமைச்சருக்கு ஞாபகப்படுத்த வேண்டும். ஒருவரை **ராணுவ வீரராக** தெரிந்தெடுக்கப்படும்போது

அவரைப்பற்றி **போலீஸ் விசாரனை** நடத்தி **முன்சீப்,** கிராம அதிகாரி ஆகியோரின் அத்தாட்சியுடன் **அவர் இந்தியர்தான்** என்பதை உறுதிபடுத்தியபின் **பாக்கிஸ்தானுடன் போர் புரியும்முன்** அவர் தேச பக்தி உள்ளவரா அல்லது **இரகசிய உளவாளியா** என்பதையெல்லாம் இரகசியமாக **விசாரித்து அறிந்த பின்தான்** யுத்த களத்துக்கே அனுப்புவார்கள். இந்திய ராணுவத்தில் இத்தனை இரகசிய நடைமுறைகளையெல்லாம் நடத்தி அவரை பாக்கிஸ்தானுக்கு எதிராக யுத்தத்துக்கு அனுப்பி **நாட்டுக்கு வெற்றி தேடி தந்த** அந்த போர் வீரரை **இந்தியர் அல்ல** என்று கூறி NRC இந்திய **குடிமக்கள் பதிவேட்டு சட்டப்படி** அந்த **தியாகியை** அவர் ஒரு **முஸ்லீம் மதத்தை** சேர்ந்தவர் என்ற **ஒரே காரணத்தால்** அவரை **சிறையிலிடுவது** எந்த வகையில் நியாயம் ?

**உதாரணம் 2** நம் இந்திய தேசத்தின் **தலைமகனும்** முன்னாள் ஜனாதிபதியாக ஊழலற்ற முறையில் நம் **பாரத தேசத்தை** அளுகை செய்த திரு. **பக்ருதீன் அலி அகமது** அவர்களின் **குடும்பத்தாருக்கு** குடிமக்கள் பதிவேட்டு சட்டப்படி (NRC) **இந்திய பிரஜை உரிமை மறுக்கப்பட்டதே** ! காரணம் அவர் குடும்பத்தினர் **முஸ்லீம் மதத்தை** சார்ந்தவர். நம் பாரத தேச **முன்னாள் ஜனாதிபதி குடும்பத்தினருக்கே இந்திய குடி உரிமை மறுக்கப்பட்டதே**! இந்த இரண்டு உதாரணங்கள் **உள்துறை மந்திரி** திரு. அமித்ஷா அவர்களுக்கு போதும் என்று நினைக்கிறேன். இந்த நிலையில் இந்தியாவில் உள்ள **இஸ்லாமியர்களுக்கு** ஏற்பட்ட பயமும் **போரட்டமும் நியாயம்** என்று RSS போன்ற **இந்துமதத் தீவிரவாதிகள்** ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

இதை வாசிக்கும் வாசகர்கள் இந்தியாவில் இந்து–முஸ்லீம் போராட்டம் உண்டாகி இரத்த ஆறு இந்தியாவெங்கும் ஓடாதபடியிருக்க ஜெபிப்போம்.


## ஜாமக்காரன் வேண்டாம்

ஜாமக்காரன் வாசிப்பதால் எங்கள் விசுவாசத்துக்கு பாதிப்பு உண்டாகிறது.

ஜாமக்காரன் எங்களுக்கு அனுப்புவது வேஸ்ட் – நிறுத்திவிடுங்கள்.

ஜாமக்காரன் எங்கள் ஆவிக்குறிய வளர்ச்சிக்கு பிரயோஜனமில்லை.

ஜாமக்காரன் எங்கள் வீட்டில் உள்ளவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாகிறது.

ஜாமக்காரனுக்கு நாங்கள் யாரும் பணம் அனுப்புவதில்லையே! ஏன் தொடர்ந்து அனுப்புகிறீர்கள். அதை வாசித்துக்கொண்டிருந்த என் பெற்றோர் இறந்துவிட்டனர்.

ஜாமக்காரனை திறந்தால் மற்ற ஊழியக்காரர்களை குற்றம் சொல்வதைத்தான் அதிகம் வாசிக்க நேரிடுகிறது. உங்களுக்கு மற்றவர்களை குற்றப்படுத்தும் ஆவி இருப்பதால் எங்களுக்கு அதை வாசிக்க இஷ்டமில்லை.

ஜாமக்காரன் எங்கள் ஆத்துமாவுக்கு கொஞ்சமும் பிரயோஜனமில்லை.

மேலே எழுதியுள்ள காரணங்களை தவிர வேரு எந்த காரணத்தாலும் ஜாமக்காரன் உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்துக்கு தொல்லை கொடுப்பதாக உணர்ந்தால் தயவுசெய்து உங்களுக்கு அனுப்பும் ஜாமக்காரன் மேல் திரும்பி அனுப்பப்படுகிறது என்று எழுதி அல்லத Refused Redirected என்று எழுதி ஸ்டாம்ப் ஒட்டாமல் அப்படியே தபால் பெட்டியில் போட்டுவிடுங்கள் இது எங்களுக்கு கிடைத்தவுடன் உங்கள் விலாசத்தை கம்ப்யூட்டரிலிருந்து நீக்கி விடுவோம். அதன்பிறகு ஜாமக்காரன் உங்களை தொல்லைப்படுத்தமாட்டார்.



## CSIயின் புதிய மாடரேட்டர் அவர்களை வாழ்த்துகிறோம்

தெற்கு கேரளா டையோசிஸ் CSI பிஷப் Rt. Rev. A. DHARMARAJ RASALAM அவர்கள் 2020 வருடம் முதல் மாசமான ஜனவரி மாதம் 24 CSI டையோசிஸ்களின் பிரதான தலைமை ஸ்தானமான மாடரேட்டர் என்ற பெரும் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். **மாடரேட்டர் Rt. Rev. A. DHARMARAJ RASALAM** அவர்களை ஜாமக்காரன் வாசகர்கள் பெயரிலும் என் தனிப்பட்ட பெயரிலும் வாழ்த்துகிறோம்.

மாடரேட்டர் அவர்கள் ஆந்திர மாநிலத்தில் மிஷனரியாக **ஈட்டூர் நகரம்** என்ற சிறிய கிராமத்தில் மிஷனரி ஊழியம் தொடங்கியபோதே நான் அவரை அறிவேன். மாடரேட்டர் அவர்கள் பிஷப்பாக பணியாற்றும்போது பல விஷயங்களில் அவரைப்பற்றி நான் ஜாமக்காரனில் கடுமையாக விமர்சித்துள்ளேன் என்றாலும் அந்த விமர்சனங்களை பொருட்படுத்தாது என் பிரசங்கத்தால் CSI சபைக்கு பெரும் பிரயோஜனம் உண்டு என்பதற்காகவும் ஆரம்ப காலம் தொடங்கி என்மேல் தனிப்பட்ட முறையில் அன்புகொண்ட காரணமாகவும் பிஷப் அவர்களுடைய டையோசிஸ்ஸில் நான் பிரசங்கிக்கும் எல்லா கண்வென்ஷன்களில் தலைமை தாங்கியதின் மூலம் என்னிடம் வெறுப்பு காண்பிக்காத ஒரே பிஷப் **Rt. Rev. A. தர்மராஜ் ரசாலம்** அவர்கள்தான் என்பதை பெருமையோடு அறிவிக்கிறேன்.

கர்த்தர் தாமே CSIயின் 24 டையோசிஸ்களை இவர் தலைமையில் வசனத்தின்படி வழி நடத்துவராக.

**FEBRUARY - 2020**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription :**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.